அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:312/2015

தேதி: 29/12/2015

# அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சேலம் மேற்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் ச.ம.க. தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ தலைமையில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

*அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சேலம் மேற்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் எடப்பாடி வைத்திலிங்கம் மஹாலில் நடைபெற்றது.*

*எடப்பாடி தொகுதிச் செயலாளர் கே.செங்கோடன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கட்சியின் நிறுவனர் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ கலந்து கொண்டு எழுச்சியுரை ஆற்றினார். சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் ஏ.மைக்கேல் தங்கராஜ் அனைவரையும் வரவேற்றுப்பேசினார். கூட்டத்திற்கு எடப்பாடி ஒன்றிய செயலாளர் ஏ.வடிவேல், கொங்கணாபுரம் ஒன்றியச் செயலாளர் ஏ.அர்ச்சுணன், சேலம் மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் கெ.தனபால், டோல்கேட் ஜெயராமன், கே.செந்தமிழ்செல்வன், பி.கே.சீனிவாசன், இளைஞரணிச் செயலாளர் எம்.சீனிவாசன், தொழிற்சங்க செயலாளர் கே.தங்கமுத்து, ஜலகண்டபுரம் நகர செயலாளர் எம்.கே.மாதையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*பொதுச்செயலாளர் கரு.நாகராஜன், கொள்கைபரப்பு செயலாளர் ஆர்.ஜெயப்ரகாஷ், துணை பொதுச் செயலாளர் என்.என்.சண்முகசுந்தரம், அரசியல் ஆலோசகர் ப.பன்னீர்செல்வம், நிதி ஆலோசகர்.டாக்டர் ராஜசேகர், இளைஞரணிச் செயலாளர் சாம் மேத்யூ, மகளிரணி துணைச் செயலாளர்கள் மா.ரா.ஜெமிலா, எம்.பாகீரதி, சேலம் மாநகர மாவட்ட செயலாளர்கள் ஜே.கே.என்.முருகேசன், சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஜவஹர் ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் லாலா கணேசன், ஈரோடு மாநகர கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.சின்னசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

1. தமிழகத்தில் மழை வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தியடைய கூட்டம் அஞ்சலி செலுத்துகிறது. உயிரிழந்தவர்களின் உற்றார் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்களை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது

2. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்து அவர்கள் வாழ்வு மறுசீரமைப்பு செய்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கோரிக்கைகளை முழுமையாக ஏற்று மத்திய அரசு மழை நிவாரண நிதியை உடனடியாக வழங்கிட வேண்டுமென்று இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

3. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, அவர்களின் இழப்பிற்கு ஏற்றவாறு கணக்கிட்டு நிவாரணத் தொகை வழங்கிட வேண்டுமென இக்கூட்டம் தமிழக அரசை வேண்டி கேட்டுக் கொள்கிறது.

4. தனியார் மற்றும் அரசு சர்க்கரை ஆலைகள், கரும்பு விவசாயிகளுக்கு தர வேண்டிய நிலுவை தொகையை உடனடியாக வழங்கி விவசாயிகள் வரும் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியோடு கொண்டாட வழிவகை காண வேண்டுமாய் தமிழக அரசை இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

5. ஜல்லிக்கட்டு நடந்தே தீருமென்று மீண்டும் மீண்டும் தமிழக மக்களுக்கு உறுதி அளித்து வரும் மத்திய அரசு, வருகிற பொங்கல் பண்டிகை காலங்களில் ஜல்லிக்கட்டு நடத்தும் வாய்ப்பை அவசியம் ஏற்படுத்த வேண்டும் என்று இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

6. காவிரியின் குறுக்கே அணைக்கட்ட முயற்சிக்கும் கர்நாடகத்தையும், பலமாக உள்ள முல்லை பெரியாறு அணைக்கு பதிலாக புதிய அணைக்கட்டும் முயற்சிக்கும் கேரளா அரசையும் இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

7. 2016 சட்டமன்றத் தேர்தலுக்கு சேலம் மாவட்ட சட்டமன்ற தொகுதி அனைத்திலும் வாக்குச்சாவடி வாரியாக தேர்தல் பணிக்குழு அமைப்பது எனவும், ஜனவரி மாதம் முழுவதும் உறுப்பினர்கள் புதுப்பித்தல், மற்றும் புதிய உறுப்பினர்கள் சேர்த்தல், முகாம்களை நடத்துதல் எனவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

8. பல்வேறு வழிகளில் நசிவடைந்து வரும் நெசவுத் தொழிலை மேம்படுத்த சேலம் மாவட்டத்தில் ஜவுளிப்பூங்கா உட்பட நெசவாளர்கள் குறை தீர்க்கும் சிறப்பு அமைப்பு ஏற்படுத்திட வேண்டும் என்று இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

9. சேலம் மாவட்ட மக்கள் வர்த்தக ரீதியாக மேன்மை அடைந்திட செயல்படாமல் இருக்கும் ஏர்போர்ட் செயல்பட மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

10. சேலம் மாவட்டம் கல்வராயன்மலை தொடர்ச்சியில் உள்ள மலைவாழ் மக்கள் தங்கள் வாழ்வாதாரமாக மரவள்ளி பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிர் செய்கின்றனர். அவர்களிடம் இடைத்தரகர்கள் குறைந்த விலைக்கு வாங்க முயற்சிக்கின்றனர். எனவே, அரசு விவசாயிகளிடம் இருந்து அரசு நேரிடையாக மரவள்ளிக் கிழங்கினை கொள்முதல் செய்து அவர்களுக்கு உரிய சந்தைவிலை கிடைத்திட ஆவண செய்திட வேண்டும் என்று இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

11. சேலம் மாநகரில் முள்ளுவாடி கேட்டில் மேம்பாலம் கட்ட வேண்டும் என்ற மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை அரசு உடனே கவனத்தில் கொண்டு மேம்பாலப் பணியை விரைந்து முடித்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

12. சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மாவட்டங்களைப் போல தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களையும் பேரிடரால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்து அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு, விவசாயிகளுக்கு உரிய நிவாரணங்களை வழங்கிட வேண்டுமாய் தமிழக அரசை இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்